## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 16–ஆம் நாள் திங்கட்கிழமை**

**இசைவுத்தீர்ப்பு எண்.280/2013–ல்**

**நிறைவேற்று மனு எண்.178/2013**

**CNR.No.TNSA010047882019**

**M/s. Shriram Transport Finance Co.Ltd, Salem.**
**Represented by its authorized representative**
**Mr.P.ஜெயகுமார் ... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்.**

**–எதிர்–**

**1.J.ராஜ்குமார்**
**2.S.பிரபாகர் ... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்.**

இந்த மனு இன்று (11.06.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.N.ரத்தினவேல்** அவர்களும் 02-ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டநிலையில் 1-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.V.துரைராஜ்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

இசைவுத்தீர்ப்பு நடவடிக்கையில் 26.08.2013-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட அளிப்பீட்டை எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியை கைதுசெய்து உரிமையியல் சிறையில் அடைப்பதன் மூலம் நிறைவேற்றக்

கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **21-**ஆம் வகுமுறையின் **11(2)-**ஆம் விதியுடன் உடனிணைந்த **37-**ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. AC.No.280/2013 என்ற இசைவுத்தீர்ப்பு நடவடிக்கையில் மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் நலச்சார்பாக 26.08.2013-ஆம் தேதியன்று அளிப்பீடு வழங்கப்பட்டது. அளிப்பீட்டில் கண்டுள்ள தொகையை எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளி இந்நாள்வரை செலுத்தி அளிப்பீட்டை தீர்க்கவில்லை. மேலும், அளிப்பீட்டை வேறு விதத்திலும் தீர்க்கவில்லை. எதிர்மனுதாரர்களுக்கு அளிப்பீட்டை தீர்ப்பதற்கு போதிய வருவாயும் வழிவகையும் உள்ளது. ஆனால், வேண்டுமென்றே தீர்க்காமல் இருந்து வருகின்றனர். ஆகையால், எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புக் கடனாளிகளை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைப்பதன் மூலம் மேற்சொன்ன அளிப்பீட்டை நிறைவேற்ற வழிவகை செய்ய ஆணையிட வேண்டும்.

**1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்**

02. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை. அளிப்பீட்டை தீர்க்க 1-ஆம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளிக்கு போதிய வருவாயும் வழிவகையும் உள்ளது என்று மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை. இந்த 1-ஆம் எதிர்மனுதாரர் செய்த தொழில் நலிவடைந்துவிட்டது. இந்த 1-ஆம் எதிர்மனுதாரருக்கு வருவாயோ வேறு வழிவகைகளோ இல்லை. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

03. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. இந்த மனுவிற்கான இசைவுத்தீர்ப்பு நடவடிக்கையில் 26.08.2013-ஆம் தேதியன்று அளிப்பீடு வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த நிறைவேற்று மனு உரிய காலவரம்புக்குள் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அளிப்பீட்டில் கண்டுள்ளபடி தொகையை செலுத்திவிட்டதாகவோ அல்லது அளிப்பீடு வேறுவகையில் தீர்க்கப்பட்டுவிட்டதாகவோ 1-ஆம் எதிர்மனுதாரர் கூறவில்லை. 2-ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிறைவேற்று மனுவை ஏன் அனுமதிக்ககூடாது என்று காட்ட ஏற்றுக்கொள்ள காரணம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. ஆகையால், இந்த மனுவில் கண்டுள்ள அளிப்பீட்டை உரிய நடைமுறை பின்பற்றி நிறைவேற்றுவது உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

05. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. 1-ஆம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளியை ஏன் கைதுசெய்து உரிமையியல் சிறையில் அடைக்ககூடாது என்று காரணம் கோரும் உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் **21-**ஆம் வகுமுறையில் **37-**ஆம் விதியின்கீழான அறிவிப்பை **1-**ஆம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளிக்கு

அனுப்ப இந்த நீதிமன்றம் ஆணையிடுகிறது. அடுத்த வழக்கு எடுப்பு நாள் 10.07.2025.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 16–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை